# காலை முரசு

பக்கங்கள்:-25

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 27 வெள்ளிக்கிழமை 12.09.2025 | அதிர்வு 42


## மஹிந்தவுக்குக் கொழும்பில் வீடு வழங்க நால்வர் விருப்பம்

### அவர்களில் ஒருவர் தமிழர்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்குக் கொழும்பில் வீடு வழங்க நான்கு பேர் ஏற்கனவே முன்வந்துள்ளனர் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா 03▶



## கொழும்பில் இருந்து வெளியேற்றப்பட்ட

# மஹிந்தவுக்கு தங்காலையில் பெரு வரவேற்பு





கொழும்பு - விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச இல்லத்தில் இருந்து நேற்று மதியம் வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அம்பாந் 02▶




பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்க அனுமதி மறுத்ததன் மூலம் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு சாவுமணி அடித்திருக்கிறார் சபாநாயகர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

நாட்டின் நிறைவேற்றதிகாரத்தினுடைய தலைவர் ஜனாதிபதி. அந்த நிறைவேற்றதிகாரத்தை பிரயோகிக்கின்றது அமைச்சரவை. அந்த அமைச்சரவையின் அங்கத்தவர்கள் நிறைவேற்றதிகாரத்தின் பங்காளிகள் என்ற முறையில் அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படலாம் என்பது சபாநாயகரின் கருத்து. அது சரிதான்.

ஆயினும், நிறைவேற்றதிகாரப் பொறுப்பில் இல்லாதவர்களுக்கு எதிராக விசேட காரணங்கள், விளக்கங்கள், நியாயங்கள் இல்லாமல் ஒரு பிரேரணையைக் கொண்டுவரக் 03▶





# மஹிந்தவுக்கு தங்காலையில் பெரு வரவேற்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தோட்டை – தங்காலையில் அமைந்துள்ள தனது சொந்த இல்லத்துக்கு நேற்று மாலை சென்றடைந்தார்.

அங்கு மஹிந்தவை அவரது ஆதரவாளர்கள் பெருமளவில் கூடி வரவேற்பளித்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமைகளை நீக்குவதற்குரிய சட்டமூலம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனைச் சபாநாயகர் உடனே சான்றுரைப்படுத்தியதால் சட்டம் நேற்று முன்தினம் தொடக்கம் அமுலுக்கு வந்தது.

இதனையடுத்தே கொழும்பு – விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச இல்லத்தில் இருந்து நேற்று மஹிந்த வெளியேறினார்.

இதேவேளை, தமது பயணத்தை ஆரம்பித்த அம்பாந்தோட்டை – தங்காலையில் மீண்டும் வாழ்க்கைப் பயணத்தைக் கொண்டு செல்ல தமது தந்தை தங்காலைக்கு வந்துள்ளார் என்று மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தாய் நாட்டின் மக்கள் மீது அவர் கொண்டுள்ள உணர்திறன் மற்றும் மக்கள் அவர் மீது கொண்டுள்ள அன்பு மற்றும் ஆசீர்வாதங்கள் அவரது சொத்துக்கள் எனத் தான் நம்புவதாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இன்றும், நாளையும் எதிர்காலத்திலும் அசைக்க முடியாத தலைமையை மஹிந்த ராஜபக்ஷ கொண்டுள்ளார் என்றும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.













## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது என்றுதான் நாடாளுமன்ற நிலையில் கட்டளைகள் கூறுகின்றனவே தவிர, காரணங்கள், விளக்கங்களோடு ஓர் அலுவலருக்கு எதிராக இத்தகைய பிரேரணை கொண்டுவரக் கூடாது என்று நிலையில் கட்டளைகள் கூறவில்லை.

இப்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக, அவர் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற காலத்தில் ஆற்றிய பணியைக் குறிப்பிட்டு அதன் பேரிலேயே இந்தப் பிரேரணை முன்மொழியப் பட்டிருக்கின்றது. ஆகவே இதனை சபாநாயகர் நிராகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்க முடியாது. ஆயினும், இது விடயத்தில் முடிவு செய்யும் தற்றுணிவு அதிகாரம் சபாநாயகருக்கு மட்டுமே இருப்பதால் அவர் தனிக் காட்டு ராஜாவாக - தன் ஏக போக தர்பாராக - நாடாளுமன்றைக் கணித்து, இந்த முடிவை அறிவித்திருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் அதிகம் வெட்டிப் பிடுங்குவோம், சூத்திரதாரிகளை அம்பலப்படுத்துவோம் என்றெல்லாம் ஆரவாரம் பண்ணி, அதன் மூலம் அதிகாரத்துக்கு வந்த இந்த ஆட்சிப் பீடம், இப்போது அதைச் செய்ய முடியாமல் அந்த விடயத்தில் நொண்டுகிறது. இச்சமயத்தில் இந்தப் பிரேரணையை சபையில் விவாதத்துக்கு எடுத்தால், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் விடயத்தில் இந்த அரசினதும் கையாலாகாத்தனமும் பிய்த்து உதறப்படும் என்ற காரணம் கருதித் தான் இந்தப் பிரேரணைக்கு சபாநாயகர் ஆப்படித்திருக்கின்றார் என்று கருத முடிகின்றது. இது பற்றிய விடயம் இன்றைய ஆசிரியர் தலையங்கத்திலும் ஆராயப்பட்டு இருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தின் அங்கமாக இல்லாத பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து, நிறைவேற்றி, நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என்பதாலும், இந்தப் பிரேரணையை விவாதத்திற்கு எடுக்காமல் தான் நிராகரிக்கிறார் என சபாநாயகர் அறிவித்தாலும் கூட, அவ்வாறு நிறைவேற்றதிகாரத்தின் பங்குதாரர் இல்லாத இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரான முதலாவது தமிழர் அமிர்தலிங்கத்திற்கு எதிராக 1981 ஆம் ஆண்டு இதே போன்ற நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்று இதே நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது என்பதும், அதன் விவாதத்தை ஒட்டி மிக மோசமான பேரினவாதம் நாடாளுமன்றத்தில் கிளப்பப்பட்டது என்பதும் மறக்க - மறுக்க - மறைக்க - முடியாத உண்மைகள். அதுவே பின்னர் 1983 இல் மோசமான இனக் கலவரத்துக்கு வழி செய்யும் தூண்டலாக அமைந்தது என்பதும் மறுக்கத்தக்கது அல்ல.

அப்படி நிறைவேற்றதிகாரத்துக்கு உட்படாத தரப்புகளுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானமே இந்த நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய உதாரணம் இருக்க, அதையே காரணம் காட்டி இந்தப் பிரேரணையை இப்போது நிராகரித்தமையை ஒரு பொறுப்பில்லாத - நியாயப்படுத்த முடியாத - நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைக்கின்ற - அடாவடித்தனமான - நடவடிக்கையாகவே அர்த்தப் படுத்த வேண்டும்.

★ ★ ★

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை - சலுகைகளை - பறிக்கும் சட்டத்தை தேசிய மக்கள் சக்தி அரசு நேற்று நிறைவேற்றியமையை அடுத்து, முன்னாள் ஜனாதிபதிகள் தங்களது உத்தியோகபூர்வ இல்லங்களை விடுத்து, தத்தமது சொந்த இடங்களை - வீடுகளை - நோக்கி நகரத் தொடங்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பிற்பகலில் கொழும்பு விஜயராம மாவத்தையில் தாம் இதுவரைத் தங்கியிருந்த வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றமை ஓர் அரசியல் நிகழ்வாக ஊடகங்களில் - குறிப்பாக சமூக ஊடகங்களில் - பிரதிபலித்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

2015 ஜனவரியில் அவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்று அலரி மாளிகையில் இருந்து புறப்பட்ட சமயம் இடம்பெற்ற அல்லது கட்டவிழ்ந்த அரசியல் உணர்வு நிகழ்வுகளை போலவே நேற்றைய விடயங்களும் அரங்கேறின.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோல்வியுற்ற பின்னர், அவரது அரசியல் மீளெழுச்சி அலரி மாளிகையில் இருந்து அவர் புறப்படுவதையொட்டி இடம்பெற்ற சம்பவங்களில் இருந்துதான் ஆரம்பித்தன. அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்குள் ராஜபக்ஷக்களின் மீளெழுச்சி சாத்தியமாயிற்று. 2018 உள்ளூராட்சி தேர்தலில் பெரு வெற்றியீட்டி தங்களின் விஸ்வரூபத்தை மீண்டும் ராஜபக்ஷக்கள் காட்டினார்கள்.

2015 ஜனாதிபதித் தேர்தல் தோல்வியின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தென்னிலங்கையில் கிட்டிய ஆதங்கம் மற்றும் அனுதாபத்துடன் கூடிய மக்கள் செல்வாக்கு இப்போதும் அவர் விஜயராம மாவத்தை உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து துரத்தப்பட்ட போதும், தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்பட்டிருப்பதாக தென்னிலங்கை விமர்சனங்கள் சிலர் கூறுகின்றனர்.

மக்களின் இந்த அனுதாபத்தைப் பயன்படுத்தி, அரசியல் ரீதியாக மீண்டெழுந்து, ராஜபக்ஷக்களை மஹிந்தர் மீட்டெடுப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் நாங்கள் பார்க்க வேண்டும்.

கொழும்பு விஜயராம மாவத்தை இல்லத்தில் இருந்து தங்காலையில் தனது கால்டன் இல்லத்துக்கு இடம் மாறிய மஹிந்த ராஜபக்ஷ, அங்கு நிரந்தரமாகத் தங்கி விடப் போவதில்லை என்பதை அவருக்கு நெருங்கிய வட்டாரங்களில் இருந்து உறுதிப்படுத்த முடிந்தது.

கொழும்பில் தங்களுடன் வந்து தங்கி இருக்குமாறு மூன்று பிள்ளைகளும் அழைத்துள்ள போதிலும் அவர்களோடு தங்கும் நிலையில் அல்லது விருப்பில் மஹிந்தர் இல்லை என்று தெரிகிறது.

தம்மை தமது ஆதரவாளர்களும், அன்பர்களும் எந்நேரமும் வந்து சந்திக்கக் கூடிய வகையில் தான் தனித்துவமாகத் தங்கி இருப்பதை மஹிந்தர் விரும்புகின்றார். அதன் காரணமாகத் தமக்குத் தோதான இல்லம் ஒன்றை கொழும்பில் பார்க்குமாறு அவர் தமது உதவியாளர்களைப் பணித்திருக்கிறார். அடுத்த ஒரு வாரத்துக்குள் அவருக்கான இல்லம் கொழும்பில் தயாரானதும் அதற்கு இடம் மாறி வருவதற்கு அவர் காத்திருக்கிறார் எனவும் தெரிகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளில் கை வைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசு, ஆயினும் அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தில் இன்னும் கை வைக்கவில்லை. ஆனால் இந்த உரிமையும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நீடிக்குமா என்பது சந்தேகமே. புதிய அரசமைப்பு வரும்போது இந்த ஓய்வூதியம் கைவாங்கப்படும் என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டு இருக்கிறார்.

ஆனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுக்கு ஆப்படிக்கும் புதிய சட்டமூலத்தை அரசு கொண்டுவரும் போது, முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்துக்கும் நிரந்தரமாக ஆப்பு வைக்கப்படும் என வேறு சில வட்டாரங்கள் கூறுகின்றன.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசு தனது பதவிக்காலத்தில் ஆடி முடிக்க போகின்ற ஆட்டத்தைப் பார்த்தி ருப்பதை தவிர மக்களுக்கு வேறு வழி இல்லை.

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபேவர்தன தெரிவித்தார்.

அந்த 4 வீடுகளில் ஒன்றைப் பார்வையிட வருமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட போதும் அவர் அங்கு சென்று பார்வையிடவில்லை என்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வீடு வழங்க முன்வந்தோரில் தமிழர் ஒருவரும் அடங்குகின்றார் என்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ கொழும்புக்குத் திரும்புவது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை என்றும், அவர் தங்காலையில் அமைந்துள்ள தனது இல்லத்தில் சிறிது காலம் தங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும், தேவைப்படும்போது கொழும்புக்குத் திரும்புவார் என்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்தார்.



# அமெரிக்கக் குழுவினர் நேற்று ஜனாதிபதி அநுரவுடன் சந்திப்பு

அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகக் குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவைச் சந்தித்துக் கலந்து ரையாடினர்.

இலங்கையில் இருந்து அமெரிக்கா இறங்குமதி செய்யும் பொருட்கள் மீதான தீர்வை வரி குறித்து கலந்துரையாடுவதற் காக இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட குழுவைப் பாராட்டிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் குழு, இலங்கை இதுவரை அடைந்துள்ள பொருளாதார முன்னேற் றத்தைப் பாராட்டியது.



இதுவரையிலான இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அமெ ரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் வழங்கிய ஆதரவு மற்றும் எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்படவுள்ள வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை என்பது மீண்டு வரும் ஒரு சிறிய பொருளாதாரத்துடன் கூடிய நாடு என்பதையும், சிறியதொரு வெளிப்புற தாக்கம் கூட இலங்கையின் மீது குறிப் பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்ப தையும் ஜனாதிபதி, அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி குழுவின் கவனத் துக்குக் கொண்டு வந்தார். இந்த அனைத்து கார ணிகளையும் கருத்தில் கொண்டு வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுகள் தொடர வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டி னார்.

அனைத்து தீர்மானங்களின் போதும் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால உறவை வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அமெ ரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகப் பணிப்பாளர் (தெற்காசியா) எமிலி எஷ்பி, உதவி அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி (தெற்கு மற்றும் மத்திய ஆசியா) பிரெண் டன் லின்ச், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக பொருளாதார மற்றும் வணிக அதிகாரி டெனியல் ஜக்சன் மற்றும் அரசியல்-பொருளாதார ஆலோசகர் அந்தணி பியர்னோட் ஆகியோர் அமெ ரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப் பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொரு ளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்க முவ மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ.விமலேந்தி ராஜா ஆகியோர் இந்தக் கலந்துரை யாடலில் பங்கேற்றனர்.







# அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் கண்டு பொதுவான அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்குக

## மாகாண ஆளுநர்கள், மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் சிறந்த ஒருங்கிணைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

அரசியல் அதிகாரம் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களைப் பயன்படுத்தும் கலாச்சாரம் தற்போதைய அரசின் கீழ் முடிவுக்கு வந்துள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய திட்டத்தை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவும், 2025 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டத் திட்டங்களை மீளாய்வு செய்வதற்காகவும் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.



கல்வி, சுகாதாரம் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற துறைகளுடன் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கலான சூழ்நிலைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளும் இங்கு ஆராயப்பட்டன.

வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் உதவிகளின் கீழ் நாட்டுக்குக் கிடைக்கும் திட்டங்களைச் செயற்படுத்துவதில் விசேட திட்ட அலுவலகங்களை நிறுவுவதற்குப் பதிலாக, தற்போதுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்குள் செயற்பட்டு, குறிப்பிட்ட நேரத்துக்குள் தொடர்புடைய திட்டங்களை நிறைவு செய்து, மக்களுக்கு நன்மைகளை வழங்குமாறு மாகாண ஆளுநர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பாடசாலை கட்டமைப்பை நெறிப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. வலய மட்டத்தில் ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று அவற்றை நெருக்கமாக ஆராய்ந்து , அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கான சிறந்த தீர்வை முன்வைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தினார்.

மாகாண ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்கள் ரஸல் அபோன்சு, கபில ஜனக பண்டார, அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.



# ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறை: மேன்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்ற பிரசன்ன

கொழும்பு மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையில் இருந்து தன்னை விடுவித்து விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை அவரது சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து நேற்று வியாழக்கிழமை வாபஸ் பெற்றுள்ளார்.

இந்த மனு மாயாதுன்ன கொரயா, குமாரத் ரத்னம், சஷி மஹேந்திரன், தமித் தொட்டவத்த மற்றும் அமல் ரணராஜா ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



இதன்போது முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி அந்த மனுவை வாபஸ் பெற்றார்.

2015 ஆம் ஆண்டு வர்த்தகர் ஒருவரைத் தொலைபேசியில் மிரட்டி அவரிடம் இருந்து 64 மில்லியன் ரூபா பணத்தைக் கேட்ட குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிச்சூட்டு முயற்சி முறியடிப்பு! பொலிஸாரால் 4 பேர் மடக்கிப் பிடிப்பு!!

திட்டமிடப்பட்ட துப்பாக்கிச்சூட்டு முயற்சியை முறியடித்து 4 சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி – ஆல்பர்ட் வீதியில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரைக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் ஒருவர், தான் வைத்திருந்த பையைத் தூக்கி எறிந்துவிட்டு அந்தப் பகுதியை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். மற்றைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீசப்பட்ட பையில் இருந்து ரி – 56 ரக துப்பாக்கி ஒன்று, 30 தோட்டாக்கள், கத்தி ஒன்று மற்றும் மூன்று கையடக்கத் தொலைபேசிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தப்பிச் சென்ற சந்தேகநபர் உட்பட மேலும் மூவர் மாளிகாவத்தையில் உள்ள போதிராஜா மாவத்தை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்களை கைது செய்யும்போது 18 கிராம் ஐஸ் போதைப் பொருள், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் 2 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கொழும்பு 14, வெல்லம்பிட்டி, மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 19, 25, 40 மற்றும் 48 வயதுடையவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவரின் உத்தரவின் பேரில், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு அவர்கள் தயாராகியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளின்போது கண்டறியப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சபாநாயகருக்கு எதிராகவும் பிரேரணை கொண்டு வருவோம்

## நாடாளுமன்றில் ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

“நாடாளுமன்றத்தில் எதிரணி உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சபாநாயகர் தனது நிலைப்பாட்டை நேற்று முன்தினம் புதன்கிழமை சபையில் தெளிவுபடுத்திய பின்னரே அவருக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



“இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் தற்போதுதான் முதன்முறையாக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடாளுமன்றத்தில் 1978 இல் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்திய நாடாளுமன்றத்தில் உப ஜனாதிபதிக்கு எதிராகக் கூட இவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, நாடாளுமன்றத்தில் எதிரணிகளின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்காவிட்டால் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர நேரிடும்.

ஆகவே, தனது முடிவை சபாநாயகர் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.” – என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. வலியுறுத்தினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உணர்வைத் தூண்டும் சிக்கல்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகரவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சி கொண்டு வந்த நம்பிக்கை இல்லாப் பிரேணையை விசாரணைக்கு ஏற்பதற்கு சபாநாயகர் மறுத்துவிட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றது.

இதை வெறுமனே நாடாளுமன்ற அரசியல் பிரச்சினையாக மட்டும் கருதாமல், அதையும் தாண்டி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையோடு தொடர்பு படுத்தி, தமக்குச் சாதகமான அரசியல் காய் நகர்த்தல் ஒன்றை எதிரணி முன்னெடுக்கத் தொடங்கி இருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று ஆறரை ஆண்டுகள் தாண்டியும், இன்னும் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை என்றும், உண்மைகள் அம்பலப்படுத்தப்படவில்லை என்றும் மக்கள் கருதுகின்றனர். ஒருவகையில் அது உண்மைதான்.

அந்த விவகாரத்தைத் தாம் ஆட்சிக்கு வருவதற்கான ஒரு பெரும் சர்ச்சையாக இப்போதைய ஆளும் தரப்பு கடந்த ஆண்டு வரைப் பயன்படுத்தியது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

தான் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால், உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பான சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி, உண்மைகளை அம்பலப்படுத்துவோம் என்ற தொடர் பிரச்சாரத்தின் மீதுதான் இந்த அரசு அதிகாரத்துக்கு வந்தது.

ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னரும் இந்த விடயத்தில் இதோ செய்து காட்டுகிறோம், அதோ சூத்திரதாரிகளை மடக்குகின்றோம் என்றெல்லாம் ஆரவாரம் பண்ணிய ஆளும் தரப்பு, எதையுமே செய்யாமல் இப்போது அடங்கிப் போய்க் கிடக்கின்றது. கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானை பிறிதொரு விடயத்தில் கைது செய்து, 'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது' என்பது போல எல்லாவற்றையும் அவர் மீது சுமத்துவதற்கு ஆயத்தம் பண்ணிய தேசிய மக்கள் சக்தி அரசு, அப்படிக் குற்றச்சாட்டுகளை அவர் மீது சுமத்துவதற்கான விடயத்திலும் எந்த முன்நகர்வையும் எட்ட முடியாமல் தடுமாறிப் போய் நிற்கின்றது.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்குத் தான் கொடுத்த காலக்கெடுக்களை எல்லாம் கோட்டைவிட்டுவிட்ட அரசுத் தரப்பு, இப்போது அந்த விடயத்தை ஒட்டிப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை நாடாளுமன்றுக்கு வருமானால் அதை பயன்படுத்தி ஒரு பெரும் அரசியல் உணர்வெழுச்சியை - குழப்பத்தை - நாட்டுக்குள் எதிர்க்கட்சிகள் தோற்றுவித்து விடும் என்று அஞ்சுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலும், அது ஏற்படுத்திய பேரிழப்புக்களும், கொடூரங்களும் மக்களின் உணர்ச்சியை இலகுவில் தட்டி எழுப்பத்தக்கவை. கடந்த நாடாளுமன்றத்தில் இரண்டே இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி இன்று மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் வலிமையான சக்தியாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியைக் கொண்டதாகவும் பேரெழுச்சி பெற்றிருப்பதற்கு அந்த உணர்வுபூர்வமான விடயத்தில் உணர்ச்சியைத் தட்டிக் கிளப்பிப் பயன்படுத்தியமையும் ஒரு காரணமாகும்.

அந்த விடயத்தில் தான் அளித்த வாக்குறுதிகளை ஓராண்டு தாண்டியும் தன்னால் நிறைவேற்ற முடியவில்லை என்ற அரசியல் பின்னடைவு நிலையில், அதே உணர்வை எதிர்க்கட்சிகள் பயன்படுத்த இடமளிக்காமல் தவிர்ப்பதற்காக மேற்படி நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு வாய்ப்பு வழங்காமல் அந்த முயற்சியை முறியடிக்கும் நகர்வை சபாநாயகர் ஊடாக ஆளும் தரப்பு முன்னெடுத்து இருப்பதாகவே கருத வேண்டி இருக்கின்றது.

இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை உயிர்த்த ஞாயிறு தொடர் தாக்குதல் விடயத்துடன் தொடர்புபட்டது என்பதால் இவ்விவகாரம் சுமுகமாக அடங்கப் போகாது என்பது ஊகிக்கத்தக்கதே.



# ஓய்வுபெற்ற விமானப்படைச் சிப்பாய் வீடொன்றில் இருந்து சடலமாக மீட்பு!

ஓய்வுபெற்ற விமானப்படைச் சிப்பாய் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் அநுராதபுரம் – தம்புத்தேகம பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளிடம் இருந்து பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த ஓய்வுபெற்ற விமானப் படைச் சிப்பாய்க்கும் உறவினர் ஒருவருக்கும் இடையில் நீண்ட காலமாகத் தகராறு ஏற்பட்டு வந்துள்ளது என்று அவரது மனைவி, பொலிஸ் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

அவர் உயிரிழந்து நீண்ட நாட்கள் ஆகியுள்ளதால் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் தம்புத்தேகம வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஒரே நாள் அதிரடி வேட்டையில் 5 ஆயிரத்து 896 பேர் சிக்கினர்!

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 896 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கையை நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 661 பேரும், சந்தேகத்தின் பேரில் 39 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 564 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 357 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 44 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 24 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 207 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# அரசியலுக்கு இன்னும் ‘குட்பாய்’ கூறவில்லை

## தற்போதைய நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன் என்கிறார் சமல்

“நான் அரசியலில் இருந்து ஓய்வு பெறவில்லை. தற்போது நடப்பவற்றை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன்.”

– இவ்வாறு முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

“அரசியலுக்குள் வந்துவிட்டால் அதனைக் கைவிட முடியாது. நான் இன்னும் ஓய்வுபெறவில்லை. தற்போது நடப்பவற்றை அவதானித்து வருகின்றேன். எமக்கு மக்கள் ஆதரவு உள்ளதா என்பதை தேர்தலில் போட்டியிட்டே கண்டறிய முடியும்.” – என்றும் ஊடகங்களிடம் அவர் கூறினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சமல் ராஜபக்ஷ போட்டியிடவில்லை. அவரது மகன் சஷீந்திர ராஜபக்ஷ போட்டியிட்டு மண்கவ்வினார்.

பல மாதங்களுக்குப் பிறகு பொது வெளிக்கு வந்த சமல் ராஜபக்ஷவிடம் அரசியல் நடவடிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# பாதாள உலகக் குழுவில் அங்கம் வகிக்கும் மேலும் 15 பேர் வெளிநாடுகளில் சிக்கினர்!

இலங்கையின் பாதாள உலகக் குற்றக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த மேலும் 15 பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கைகள் ரஷ்யா, ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இடம்பெற்றுள்ளன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.



அவர் மேலும் கூறியதாவது:–

“இந்தக் குற்றவாளிகள் தற்போது அந்தந்த நாடுகளில் சட்ட நடவடிக்கைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அவை நிறைவடைந்தவுடன், அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான அனைத்து சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.” – என்றார்.

இதேவேளை, ஏற்கனவே பலர் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், இத்தகைய கைது நடவடிக்கைகள் பாதாள உலகக் குற்றங்களை ஒழிக்கப் பெரும் பங்களிப்பு செய்வதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் இந்த அறிவிப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை தொடர்பில் நாட்டில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

# வவுனியா மாநகர எல்லைக்குள் புகைத்தல் பகுதிகளுக்கு தடை!

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட உணவகங்களுடன் இணைந்தவாறாக உள்ள புகைத்தல் பகுதிகளுக்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபையின் அமர்வின் போது இந்த உத்தரவை முதல்வர் சு.காண்டீபன் வழங்கியுள்ளார். குறிப்பாக வவுனியா நகரத்தில் உள்ள சில உணவங்களுக்கு பின்புறமாக புகைப்பிடிப்பதற்கென சிறிய பகுதிகள் காணப்படுகின்றன.

இவ்வாறான பகுதிகளை உடன் தடை செய்யுமாறு மாநகர சுகாதார குழு பரிந்துரை செய்துள்ளதையடுத்து இந்த உத்தரவை மாநகர முதல்வர் வழங்கியுள்ளார். இதனையடுத்து இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வவுனியா மாநகரசபை தீர்மானித்துள்ளது.



# உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள குழப்பங்கள் பற்றி ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆராய முடிவு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாநகர சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் இடையேயான கருத்து முரண்பாடுகள், சமீபகால செயற்பாடுகள் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகள் தொடர்பாகவும் இம்மாத இறுதிக்குள் ஆராயவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயமட்ட குழுவின் முக்கிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் நேற்று மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

வவுனியா மாநகர சபையில் ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கிடையில் காணப்படுகின்ற முரண்பாடுகள், சமீபத்திய செயற்பாடுகள் தொடர்பாகவும், கூட்டணி கட்சிகளுக்கிடையிலான குழப்ப நிலைகள் தொடர்பாகவும், ஏனைய உள்ளூராட்சி சபைகள் அமைக்கும் போது கூட்டமைப்பின் முடிவுகளை மீறி செயற்பட்ட உறுப்பினர்கள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

மேலும் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்படும் போது கட்சியின் தீர்மானத்தை மீறி செயற்பட்டவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாகவும் ஆரயப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

# அனுமதியற்ற கட்டடத்திற்கு தண்டம் ரூ. 49 லட்சத்துக்கு விலக்களிப்பு வழங்கிய நகர அபிவிருத்தி அதிகாரசபை!

## வவுனியா மாநகரசபை அமர்வில் சுட்டிக்காட்டு

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள அனுமதி அற்ற கட்டடம் ஒன்றிற்கு 49 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்ட நிலையில் அந்த தொகையைச் செலுத்தத் தேவையில்லை என நகர அபிவிருத்தி அதிகாரசபை விலக்களிப்பு வழங்கியதாக வவுனியா மாநகர சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாநகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்ற போதே சபையில் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த முதல்வர் அந்த பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக 49 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. எனினும் அந்தத் தொகையைச் செலுத்ததேவையில்லை என நகர அபிவிருத்தி அதிகாரசபையால் அந்த காலப்பகுதியில் விலக்களிப்பு



டையில் அது வழங்கப்பட்டது என கூறுமாறு மாநகர முதல்வர் என்ற வகையில் எனக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே இது தொடர்பாக சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன் சபை தீர்மானம் ஒன்றை எடுத்து இதனை ஆராய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்திருந்தார்.

யில்லை, நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் விளக்கம் ஒன்றை கோரி சபை முதல்வரே அடுத்தகட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என உறுப்பினர்களான முகமட் முனவ்வர் மற்றும் சு.விஜயகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

உரிய நபர் நீதிமன்ற நடவடிக்கைளுக்கு சென்றால் நாமும் போகமுடியாது. எனவே முழுச் சபையும் இதற்கு பொறுப்பல்ல என்று உறுப்பினர் முனவ்வர் இதன்போது தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக சபை முதல்வருக்கும் இந்த இரு உறுப்பினர்களும் இடையில் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில் சபைத் தீர்மானமாக இல்லாமல் எந்த அடிப்படையில் இந்தக் கட்டண விலக்களிப்பு வழங்கப்பட்டது என்பது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விளக்கம் கோருவதற்கு முதல்வருக்கு சபை உறுப்பினர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

# ‘ரிக்ரொக்’ செயலித் தொடர்பினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுமி

## சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்

(த.சுபேசன்)

‘ரிக்ரொக்’ செயலி மூலம் இளைஞன் ஒருவருடன் ஏற்பட்ட தொடர்பால் 15வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார் என சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுப் புதன் கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 15வயதுச் சிறுமிக்கு ரிக்ரொக் செயலி ஊடாக துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 19வயதான இளைஞன் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன்பாக சிறுமியை மேற்படி இளைஞன் சரசாலைப் பகுதிக்கு அழைத்து பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்



படுகின்றது.

இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் இளைஞனைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.





# ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை பற்றிய விசாரணை அறிக்கை மன்னாரிலும் விநியோகம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கை நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மன்னார் ஊடகவியலாளர்களால் விநியோகிக்கப்பட்டது.

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக 40 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மக்கள் போராட்டத்தில் வைத்து முதல் கட்டமாக இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்டது.

பொதுமக்கள், வர்த்தகர்கள், திணைக்கள தலைவர்கள்,உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் எனப் பலருக்கும் இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை விவரங்கள் மற்றும் கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான தகவல்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


















# வவுனியா குருமன்காடு சந்தியில் நேற்று பாரதியாரின் 104 ஆவது நினைவு தினம்

(கி.வசந்தன்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104 ஆவது நினைவு தினம் நேற்று வவுனியா குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலையடியில் இடம்பெற்றதது.

இதன்போது அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. திருமதி கிருஷ்ணராஜ் லிசாந்தினியால் கவி அஞ்சலியும், ஆசிரியர் கதிர்வண்ணனால் நினைவுரையுயும் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா மாநகரசபை மேயர் சு. காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகரசபை பிரதி மேயர், மாநகரசபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



























# எல்ல விபத்தில் உயிரிழந்தோருக்கு வவுனியா மாநகரசபையில் அஞ்சலி

(கி.வசந்தன்)

அண்மையில் இராவண எல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு வவுனியா மாநகர சபையின் அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 4 ஆம் திகதி இரவு எல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் தங்காலை நகரசபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உட்பட 15 பேர் பலியாகியிருந்தனர்.

அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக வவுனியா மாநகர சபையின் நேற்றைய அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சபையின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு மெழுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.











# வவுனியாவில் பௌத்த துறவி ஒருவருக்கு சிலை அமைப்பதற்கு இடம் வழங்குங்கள்

## சபை உறுப்பினர் ஒருவர் இப்படிக் கோரிக்கை

(கி.வசந்தன்)

மரணித்த பௌத்த துறவிக்கு சிலை ஒன்றை அமைப்பதற்கு வவுனியா நகரப் பகுதியில் இடம் ஒன்றை வழங்குமாறு மாநகரசபை உறுப்பினர் லலித் ஜெயசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா மாநகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, சபையின் உறுப்பினர் முகமட் முனவ்வர் வவுனியா தர்மலிங்கம் வீதியின் முகப்பில் உள்ள காணியில் இஸ்லாமிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் தூபி ஒன்றை அமைப்பதற்கான அனுமதியை வழங்குமாறு கோரியிருந்தார். அந்தப் பகுதியில் பள்ளிவாசல் இருப்பதால் அதனை அமைப்பதற்கு அந்த இடம் பொருத்தமானதாக இருக்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

இதன்போது, எழுந்த துணை முதல்வர் கார்த்தீபன் அந்த பகுதியில் மரணித்த ஊடகவியலாளர்களிற்கான ஒரு பொது நினைவுத் தூபியினை நிறுவுவதற்கான அனுமதியை ஏற்கனவே நான் கோரியுள்ளேன். தற்போது பள்ளி அமைந்துள்ள



பகுதியானது மதராசா பாடசாலை ஒன்றுக்காவே அந்த காலப்பகுதியில் வழங்கப்பட்டது. தற்போது பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் அதனை சுற்றியுள்ள இடங்களை நீங்கள் உரிமை கோர முடியாது என தெரிவித்தார்.

இதன்போது, எழுந்த மற்றொரு உறுப்பினரான லலித் ஜெயசேகர அண்மையில் மரணித்த பௌத்த பிக்கு ஒருவருக்கு சிலை அமைப்பதற்கு வவுனியா நகரில் இடம் ஒன்றை வழங்குமாறு தாழ்மையான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

இதற்கு பதில் அளித்த முதல்வர் காண்டீபன் சிலைகள் அமைப்பது தொடர்பாக முழுமையான தீர்மானத்திற்கு ஊடாகவே செல்ல முடியும். சபை அங்கீகரித்து ஆளுநர் வரையில் அந்த விடயம் செல்ல வேண்டும். எழுத்தில் மாத்திரம் கோரிக்கைகளை தருவதால் பயன்இல்லை.

எனவே, சமூகங்களிற்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம். ஏற்கனவே எம்.ஜி.ஆர் சிலை ஒன்றை அங்கு வைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு அது தடுக்கப்பட்டிருந்தது.

எனவே, விண்ணப்பங்களை கோருவோர் முழுமையான தகவல்களை வழங்கி அதனை சபைக்கு சமர்பிக்குமாறு தெரிவித்தார்.

---

# மன்னார் நகர சபையில் ஊழல் மோசடியில் ஈடுபட்ட நபர்கள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்!

## மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் திட்டவட்டம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊழல்கள் பற்றிய விசாரணைகள் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றன. விசாரணைக் குழுக்களும் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. மிக விரைவில் ஊழல், மோசடியில் ஈடுபட்ட நபர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படும் நிலை ஏற்படும் என மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் நகர சபையினால் பல்வேறு விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மன்னாரில் ஞாயிறு தினங்களில் காலை முதல் மதியம் 2 மணி வரை தனியார் வகுப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மன்னார் நகரத்தில் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக புதிய நடைமுறைகளை அமுல் படுத்துகின்றோம். போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவதற்காக மன்னார் நகரத்தில் பஸ் போக்குவரத்து சபை மற்றும் தரிப்பிடங்களில் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம். பல இடங்களில் ஒரு வழிச்சாலையாக ஒழுங்குபடுத்தியுள்ளோம். வாகனங்களைத் தரித்து நிறுத்துவதற்காகப் பல



இடங்களை அடையாளப்படுத்தி இருக்கிறோம்.

மேலும் மன்னார் நகர சபைக்குட்பட்ட காணிகளை எல்லைப்படுத்தி அந்தக் காணிகளை துப்புரவு செய்து எல்லைப் படுத்தவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

மேலும் மன்னார் நகரத்தில் எவ்வித மணல் அகழ்வுகளும் இடம் பெற அனுமதிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்விதத்திலும் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதில்லை எனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்காக எமது பஸ் தரிப்பு நிலையத்தில் வெற்றிலை, எச்சில் துப்புதல், புகைத்தல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

மேலும் பொது இடங்களில் சிறுநீர் கழித்தலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மன்னார் நகர சபையினால் இந்த விடயங்கள் தொடர்பில் பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் கட்டுப்பாடுகளை விதிப்போம். மக்கள் இந்தச் சட்டங்களை கடைபிடிக்க வேண்டும்.

மேலும் மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊழல் குறித்து விசாரணைகள் மிக வேகமாக இடம்பெற்று வருகின்றது. விசாரணைக் குழுக்களும் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

ஆளுநர் அலுவலகத்தில் இருந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என எமக்குக் கடிதம் மூலம் தெரிய படுத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இருந்து குழு ஒன்று வருகை தந்து ஆவணங்களை பரிசீலித்துச் சென்றுள்ளது.

மிக விரைவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படும் நிலை ஏற்படும். மன்னார் நகர சபைக்கு ஏற்பட்ட நஷ்டம் மீளக் கிடைக்கப் பெறும்.

எனவே மக்கள் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும். மன்னார் நகரத்தில் அடாவடித்தனத்துடன் மக்களின் போக்குவரத்துப் பாதைகளுக்கு இடையூறை ஏற்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக எதிர் வரும் வாரம் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.





# பருத்தித்துறை ஓடக்கரையில் வேளாங்கண்ணி பெருவிழா

பருத்தித்துறை ஓடக்கரை அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்த பெருவிழா கொடி இறக்கத்துடன் நிறைவடைந்தது.

வருடாந்த பெருவிழா கடந்த 29.ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வந்த நிலையில், இறுதி நாளான கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் சிறப்பு வழிபாடுகளுடன் புனித மரியாளின் திருஉருவம் தாங்கிய கொடி இறக்கம் இடம்பெற்றது.

இதன்போது பெருமளவான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர். அதனைத் தொடர்ந்து மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது.

வருடாந்த பெருவிழாவின் போது தினமும் நண்பகல் மற்றும் மாலை வேளையில் வழிபாடுகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கிவைக்கப்பட்டது.

மாலை வழிபாட்டின் போது அன்னை வேளாங்கண்ணி மாதாவின் அடிவர்கள் முன்வந்து வழங்கிய பணிஸ், பிஸ்கட் போன்றவற்றுடன் தேநீரும் வழங்கிவைக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள், சைவ சமயத்தமவர்கள் என சமய வேறுபாடுகளை கடந்து அயலில் உள்ள பெருமளவானோர் தினமும் வழிபாடுகளில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# போக்குவரத்து பொலிஸாருக்கு சீருடைகளில் பொருத்தக்கூடிய கமெராக்கள் வழங்க தீர்மானம்



போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சீருடைகளில் பொருத்தக்கூடிய கமெராக்களை வழங்குவதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

போக்குவரத்து குற்றங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில வாரங்களுள் குறித்த கமெராக்களை அனைத்து போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வூட்லர் குறிப்பிட்டார்.




# இலங்கையின் பொருளாதாரம் பழைய நிலைக்கு திரும்புகிறது

## உலக வங்கி தெரிவிப்பு

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தனது பழைய நிலைக்கு வேகமாகத் திரும்பி வருவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய நிதி ஒப்பீடுகளை செய்துள்ளதாகவும் 2021 ஆம் ஆண்டு முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 8 சதவீதத்துக்கு சமனானது என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கிகளின் உறுப்பு நாடுகளில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மதிப்பாய்வின் ஊடாக அனைத்து இலங்கையர்களுக்கும் அரச நிதி செயற்பாடுகளை உரிய முறையில் செயற்படுத்தக்கூடிய நிலையில் இலங்கை திகழ்வதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

# பொதுமக்களுக்கான பொலிஸ் சேவையின் திருத்தப்பட்ட கட்டண விவரங்கள் வெளியீடு

பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான திருத்தப்பட்ட கட்டண அமைப்பை இலங்கை காவல்துறை வெளியிட்டுள்ளது.

அதன்படி, வெளிநாட்டு பயணம் மற்றும் தொடர்புடைய நிகழ்நேர சேவைகளுக்கான காவல்துறை அனுமதி அறிக்கையைப் பெறுவதற்கு 5,000 ரூபாய் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிபரப்பு அனுமதிகளுக்கான கட்டணம் கால அளவைப் பொறுத்தது, 6 மணித்தியாலங்களுக்கு 500 ரூபாவும், 6 முதல் 12 மணி நேரங்களுக்கு1,000, ரூபாவும் மற்றும் 12 மணி நேரத்திற்கு மேல் 2,000 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான பிரதேச காவல் நிலையங்களால் வழங்கப்படும் காவல் அறிக்கைகளுக்கு 500 ரூபாய் வசூலிக்கப்படும், அதே நேரத்தில் உள்நாட்டு நோக்கங்களுக்காக பொறுப்பதிகாரியால் வழங்கப்படும் அறிக்கைகளுக்கு 300 ரூபாவும், முறைப்பாடுகளின் நகல்கள் ஒரு பிரதிக்கு 50 ரூபாவும் வசூலிக்கப்படும் என காவல்துறை தெரிவித்துள்ளது.



# யாழில் தொல்லை தரும் திணைக்களமாக மாறி வருகின்ற தொல்லியல் திணைக்களம்

## கோட்டையைச் சூழ நெருக்கமாக 2 அடி உயரத் தூண்கள் போடும் கோமாளித்தனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்கோட்டையைச்சூழபாது காப்பு எனும் பெயரில் தொல்லியல் திணைக்களம் நாட்டும் தூண்கள் பலரைப் பலி எடுக்கும் நிலையை ஏற்படுத் தலாம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கோட்டையைச் சூழ காணப்படும் பகுதிகளில் இத்தனை ஆண்டு காலமாக வெளியாக காணப்பட்ட நிலப்பரப்பில் தற்போது 3 அடிக்கு ஒரு சீமெந்துத் தூண் என்ற இடைவெளியில் பல நூற்றுக் கணக்கான தூண்கள் நாட்டப்படுகின்றன.

தீவகத்திற்குப் பயணிக்கும் பிரதான வீதியோரத்தில் வீதிக்கு மிக அண்மையாக - வீதிப் போக்கு வரத்திற்கு இடையூறாக - இவ்வாறு தூண்கள் நாட்டப்படுகின்றன.

வீதிக்கு அண்மையில் நாட்டப்படும் தூண்களால் வீதிப் போக்கு வரத்திற்கு அதிக நெருக்கடி ஏற்படுவது மட்டுமன்றி, அதிக விபத்துக்கள் ஏற்படும் சூழலும் காணப்படுவதாக முறையிடப்படுகின்றது.

இந்தத் தூண்கள் வீதிக்கு அண்மையில் நாட்டப்படும் அதேநேரம், நிலத்தின் மேல் இரு அடி உயரம் கொண்டதாக மட்டுமே காணப்படுவதனால், இரவு நேரப் போக்குவரத்தின்போது ஒரு தூணில் மோதி விழுந்தால், மறுதூணில் மோதி நிச்சமாக தலை சேதமடைந்து மரணம் சம்பவிக்கும் அபாயமும் காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றைய தினம் பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர், மாநகர சபை, மாகாண ஆளுநர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இலங்கையில் தொல்லியல் திணைக் களம் என்றாலே தொல்லைத் திணைக் களம் எனக் குற்றம் சாட்டப்படும் நிலையில் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்படும் அடுத்த தொல்லையாக இது காணப்படுகின்றது.





# ஆந்திர காக்கிநாடாவைச் சேர்ந்த மீனவர்கள் நான்கு பேர் விடுவிப்பு



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தியாவின் ஆந்திர மாநிலம் காக்கிநாடாவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நால்வர் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

படகில்ஏற்பட்ட பிரச்சினை காரணமாகக் குறித்த கடற்றொழிலாளர்கள் நால்வரும் இலங்கை கடற்பரப்பில் நுழைந் தனர்.

அதன்போது காங்கேசன்துறை அருகே அவர்களை இலங்கை கடற் படையினர் கைதுசெய்தனர்.

இந்நிலையில் அவர்கள் நேற்று அவர் களது சொந்தப் படகிலேயே திருப்பி அனுப் பப்பட்டனர் என தெரிவிக்கப்படுகி றது.

இவர்கள் நாளை காக்கிநாடாவை சென்றடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஊடாக கடற்றொழிலாளர்கள் நால்வரும் அனுப்பி வைக்கப்பட்டனர் என காக்கி நாடா நாடாளுமன்ற உறுப்பினர் டாங் கெல்ல உதய் ஸ்ரீனிவாஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப் பிட்டுள்ளார்.




# முள்ளிக்குளத்தில் மீளக் குடியேற விரைந்து நடவடிக்கை எடுக்குக!

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் – முசலி பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமமக்களில் அகதி எனும் அவல வாழ்விற்கு முற்றுப்புள்ளி தேவை எனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிக்குளம் கிராம மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற தேசிய கணக்காய்வுச் சட்டத்திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்விடயத்தை வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசசெயலாளர் பிரிவுக் குட்பட்ட பூர்வீகத் தமிழ்க் கிராமமான முள்ளிக்குளம் கிராமம் தாமதமின்றி மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டுமென இந்த உயரிய சபையைக் கோருகின்றேன்.

குறிப்பாக முள்ளிக்குளம் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு நிலவிய அசாதரண நிலைமை காரணமாக தங்களுடைய பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்தனர். அந்தவகையில் மீன்பிடி, விவசாயம் எனத் தமது வாழ்வாதாரத் தொழில்களில் ஈடுபட்டு மிகவும் நிறைவாகவும், செழிப்பாகவும் வாழ்ந்துகொண்டிருந்த சுமார் 400 தமிழ்க் குடும்பங்களே இவ்வாறான இடப்பெயர்வைச் சந்தித்தன. இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் ஒரு தசாப்த காலத்துக்கு பிற்பாடு கடந்த 2002ஆம் ஆண்டு அவர்களுடைய சொந்த இடமான முள்ளிக்குளத்தில் மீள்குடியேற்றப்பட்டனர். இவ்வாறு தமது சொந்த இடத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு அக்காலப்பகுதியில் 150 நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மொத்தமாக 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி மகிழ்வாக வாழ ஆரம்பித்தனர். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. மீள்குடியேறி வெறுமனே ஐந்து வருடங்களிலேயே கடந்த 2007ஆம் ஆண்டு மீளவும் இடம்பெயர வேண்டிய அவலநிலைக்கு முள்ளிக்குளம் கிராம மக்கள் தள்ளப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் முள்ளிக்குளம் மக்கள் தமது பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்து இரண்டு தசாப்த காலத்தை அண்மித்துள்ள நிலையில் இதுவரை முள்ளிக்குளம் கிராம மக்களை அவர்களுடைய சொந்த இடத்தில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இத்தகைய சூழலில் முள்ளிக்குளம் கிராம மக்கள் அயல் கிராமங்களான மலைக்காடு மற்றும் காயாக்குழி உள்ளிட்ட கிராமங்களில் பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக மலைக்காடு, காயாக்குழி ஆகிய கிராமங்களில் 250 இற்கும் மேற்பட்ட முள்ளிக்குளம் மக்கள் அகதி என்னும் அவல வாழ்வை வாழ்கின்றனர். இது தவிர 175 வரையான குடும்பங்கள் இந்தியாவின் அகதி முகாம்களில் வாழ்கின்றன எனவும், மேலும் பல குடும்பங்கள் ஆங்காங்கே சிதறி வாழ்கின்றன எனவும் முள்ளிக்குளம் கிராமமக்கள் முறையிடுகின்றனர்.

இவ்வாறாக முள்ளிக்குளம் கிராமமக்கள் அகதி வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்க கடற்படையினரும் வனவளத்திணைக் களத்தினரும் இணைந்து முள்ளிக்குளம் கிராமத்தை முற்றாக அபகரித்து வைத்துள்ள நிலையைக் காணக்கூடியதாக வுள்ளது.

குறிப்பாக முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்குரிய நெற் செய்கைக்குரிய காணிகள், தோட்டக்காணிகள், குடியிருப்புக்காணிகள், நீர்ப்பாசனக. குளங்கள் உள்ளடங்கலாக 1500க்கும் அதிகமான ஏக்கர் வனவளத் திணைக் களத்தாலும் கடற்படையாலும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனக் குளங்களைப் பொறுத்தவரையில் சின்னத்தனக்கன் குளம், பெரியதனக்கன்குளம், பரவெளிக்குளம், பாலடிக்குளம், செட்டியார்குளம், அரக்குளம், புதுக்குளம் உள்ளிட்டவை முற்றாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

அதேவேளை தமிழ் மக்களுடைய காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தோட்டப் பயிர்ச்செய்கைகள் மேற்



கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களுக்கு 2002ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது அமைக்கப்பட்டு வழங்கப் பட்ட வீடுகளில் கடற்படையினரது குடும்பங்கள் தங்கவைக் கப்பட்டுள்ளன. முள்ளிக்குளம் மக்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த இடங்களும் முற்றாக அபகரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களுடைய பூர்வீகக் கிராமத்தை விடுவித்து தம்மை மீள்குடியமர்த்துமாறும் முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர்.

குறிப்பாக தம்மை மீள் குடியமர்த்துமாறு கோரி முள்ளிக்குளம் கிராம மக்கள் பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் கடந்த 2017 ஆண்டு காலப்பகுதியில் இரண்டுமாத காலம் தொடர்ச்சியாக மேற்கொண்ட தொடர் போராட்டத்தின் பலனாக அப்போதைய ஆளுநர் வருகை தந்து காணிகள் விடுவிப்புச் செய்வதாக உத்தரவாதமளிக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அதன் பின்னர் 77 ஏக்கர் காணிகளை விடுவிப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு காணிகளும் மக்களால் துப்பரவாக்கப்பட்டுள்ளன.

மக்களால் துப்பரவு செய்யப்பட்ட பகுதிகளை தீயிட்டு கொழுத்துவதற்கு கடற்படையினர் இடையூறு ஏற்படுத்தியதையடுத்து அந்தக் காணிகள் துப்பரவு செய்வதும் கைவிடப் பட்டது. இதனால் தமிழ் மக்கள் அந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

இவ்வாறாக முள்ளிக்குளம் கிராமத்தில் மக்கள் எவரும் மீள்குடியமர்த்தப்படாத நிலையிலும் அங்கு பாடசாலை இயங்கி வருகின்றது. அங்குள்ள தேவாலயத்திற்கும் மக்கள் சென்று வருகின்றனர்.

முள்ளிக்குளம் பகுதியில் இயங்கிவருகின்ற முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 42 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மலைக்காட்டுப் பகுதியில் வசிக்கின்ற முள்ளிக்குளத்தை சேர்ந்தவர்களுடைய பிள்ளைகளே முள்ளிக்குளம் பாடசாலைக்குக் காலையில் சென்று மாலையில் திரும்புகின்றனர். அதே போல் முள்ளிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பரலோகமாதா தேவாலயத்துக்கும் மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறாக தமது சொந்த இடத்துக்கு சுற்றுலாப் பயணிகளைப் போல சென்று வருகின்ற அவலத்தை சுமந்து அகதி வாழ்க்கையை முள்ளிக்குளம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தாம் வாழ்ந்த, தவழ்ந்த, விளையாடிய, பயிர்செய்த நிலங்கள் அனைத்தும் கண்முன்னே ஆக்கிரமிக்கப்பட்டு இருக்க தமது நிலத்தில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள முள்ளிக்குளம் கிராம மக்களின் அகதி என்னும் அவல வாழ்வுக்கு முடிவு கட்டப்படவேண்டும். அந்த மக்கள் உடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். முள்ளிக்குளம் மக்களை மீள் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள் ளப்பட வேண்டுமென இவ்வுயரிய சபையில் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.




# குடியரசு துணைத் தலைவர் தேர்தலிலும் ‘வாக்கு திருட்டு’ சம்பவம் இடம்பெற்றது

## பா.ஜ.க. மீது காங்கிரஸ் குற்றச்சாட்டு

நடந்து முடிந்த குடியரசு துணைத் தலைவர் தேர்தலிலும் பா.ஜ.க. வாக்கு திருட்டில் ஈடுபட்டதாக காங்கிரஸ் எம்.பியும், மக்களவையின் காங்கிரஸ் கொறடாவுமான மாணிக்கம் தாகூர் குற்றம் சாட்டினார்.

கடந்த செவ்வாய் கிழமை நடந்த குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் 767 பேர் வாக்களித்தனர், இதில் 752 வாக்குகள் செல்லுபடியானவை. 15 வாக்குகள் செல்லாதவை. இதில் 452 வாக்குகள் சி.பி. ராதாகிருஷ்ணனுக்கும், 300 வாக்குகள் சுதர்சன் ரெட்டிக்கும் கிடைத்தன. இந்த தேர்தலில் 7 பிஜேடி எம்.பிக்கள், 4 பிஆர்எஸ் எம்.பிக்கள், 1 சிரோமணி அகாலி தளம் எம்.பி. மற்றும் 2 சுயேச்சை எம்.பிக்கள் உட்பட 14 பேர் வாக்களிக்கவில்லை.

எதிர்க்கட்சிகள் கூட்டணி வேட்பாளரான சுதர்சன் ரெட்டிக்கு குறைந்தது 315 வாக்குகள் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால் 300 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆலோசனைகளை தொடங்கியுள்ளனர். ஒரு மதிப்பீட்டின்படி, ஆறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களால் கட்சி மாறி வாக்களிப்பது அல்லது செல்லாத வாக்குகள் ஆக்கப்பட்டன.

இந்த நிலையில்,"தேசிய ஜனநாயகக் கூட்டணி வாக்குகள் அவர்களின் பலத்தை விட எவ்வாறு அதிகரித்தன. எங்களுக்கு 300 வாக்குகள் மட்டுமே கிடைத்தது பற்றி நாங்கள் பகுப்பாய்வு செய்தோம். மூன்று சிவசேனா வாக்குகள், 4 ஆம் ஆத்மி கட்சி வாக்குகள், இரண்டு என்சிபி வாக்குகள் மற்றும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் ஒன்று அல்லது இரண்டு வாக்குகள் பற்றி சந்தேகம் உள்ளது. இவர்கள் செல்லாத வாக்குகளை பதிவு செய்தார்களா அல்லது கட்சி மாறி வாக்களித்தார்களா எனத் தெரியவில்லை.

அதேபோல காங்கிரஸின் ஒரு வாக்கு மற்றும் சமாஜ்வாதி கட்சியின் இரண்டு வாக்குகள் மீதும் சந்தேகம் உள்ளது." என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள மக்களவை காங்கிரஸ் கொறடா மாணிக்கம் தாகூர்,

"தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களித்ததற்காக இண்டியா கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிவசேனா நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்த் ஷிண்டே ஏன் நன்றி தெரிவிக்கிறார்?. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் "மனசாட்சி வாக்குகளை" அமைச்சர் கிரண் ரிஜிஜு ஏன் கொண்டாடுகிறார்?. இது உண்மையிலேயே மனசாட்சியா அல்லது சிபிஐஃஅமலாக்கத் துறை அழுத்தம் மற்றும் குதிரை பேரம் மூலம் மனசாட்சியாக நியாயப்படுத்தப்படுகிறதா?

எதிர்க்கட்சிகளின் வாக்குகள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குச் சென்றதாக பா.ஜ.க. தலைவர்களே ஒப்புக்கொண்டபோது, அது நாடாளுமன்றத்திற்குள் "வாக்கு திருட்டு" என்பதற்கான சான்றாக இல்லையா?.

கர்நாடகாவின் பெங்களூர் மத்திய தொகுதி முதல் இப்போது குடியரசு துணைத் தலைவர் தேர்தல்கள் வரை. மோடி– அமித்ஷா மாடல் வாக்கு திருட்டு மூலம் மட்டும்தான் வெற்றி பெறுகிறார்களா? மக்கள் ஆணையை மதிப்பதற்குப் பதிலாக வாக்குகளைத் திருடுவதாக அமைச்சர்கள் பெருமை பேசினால் ஜனநாயகம் நிலைக்குமா? அல்லது 2029 இல் பாஜகவின் வாக்குத் திருட்டு அரசியலுக்கு மக்கள் பதிலளிப்பார்களா?" எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுபற்றி திரிணமூல் காங்கிரஸின் மாநிலங்களவை குழு தலைவர் டெரெக் ஓ' பிரையன்,

"ஒரு சித்தாந்தப் போரில் எண்ணிக்கை முக்கியமில்லை. நான் உங்களுக்கு சில எண்களைத் தருகிறேன், மக்களவையில் துணை சபாநாயகர் இல்லாமல் 2,277 நாள்கள் ஆகின்றன, மணிப்பூரில் வன்முறை தொடங்கி 861 நாள்கள் ஆகின்றன, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் வரிகளை விதித்து 14 நாள்கள் ஆகிறது, மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டா பா.ஜ.க தலைவராக 966 நாள்கள் நீடிக்கிறார், மேற்கு வங்கத்தில் மகாத்மா காந்தி வேலைத் திட்டம் நிறுத்தப்பட்டு 1,281 நாள்கள் ஆகின்றன, இறுதியாக, மக்களவையில் ஒரு கேள்விக்கு பிரதமர் நரேந்திர மோடி பதிலளித்து 4,116 நாள்கள் ஆகின்றன. எனவே இந்த எண்கள் மிக முக்கியமானவை." என்று கூறினார்.



# பழனிசாமி இருக்கும் வரை தி.மு.கவுக்கு வெற்றி உறுதி

## உதயநிதி சொன்ன கருத்தை ஏற்கின்றார் டி.டி.வி தினகரன்

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி இருக்கும் வரை தி.மு.க. வெற்றி உறுதி என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வஞ்சப்புகழ்ச்சியாக சொல்லியிருந்தாலும், உண்மையைத்தான் சொல்லி இருக்கிறார் என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின் போது தேவர் திருமகனாரின் பெயர் மதுரை விமான நிலையத்திற்கு வைக்க வேண்டும் எனவும் தேவர் பெருமகனாருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும் எனவும் தென் தமிழக மக்களின் நீண்ட ஆண்டு கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை அ.ம.மு.க. தேர்தல் வாக்குறுதியிலேயே சொல்லி இருக்கிறோம்.

கடந்த தேர்தலுக்கு முன்பு பழனிசாமி, 2021 சட்டமன்ற தேர்தலில் 10.5 சதவீதத்தை அறிவித்ததால் தென் தமிழத்தில் உள்ள வாழ்கின்ற 105 சமூக மக்கள் பொங்கி எழுகின்ற சூழ்நிலை உருவானது. அந்த கருத்துக்களின் அடிப்படையில் விமானநிலையத்திற்கு தேவர் திருமகனாரின் பெயரை வைப்பதற்கு பழனிசாமி கோரிக்கை வைத்திருப்பதற்கு பொதுவான கருத்து ஒன்றை சொன்னேன். ஆனால், நான் சொன்னதை ஏதோ பழனிசாமி சொன்னதற்கு எதிர்த்து சொன்னதாக, அரசியலுக்காக சொன்னதாக சிலர் தவறாக புரிந்து கொண்டு தூண்டப்படுகிறார்கள்.

இன்றைக்கும் சொல்கிறேன், அ.ம.மு.க. எல்லா சமுதாயங்களுக்கும் பொதுவான இயக்கமாக செயல்பட்டு வருகிறது. நயினார் நாகேந்திரன் நல்ல நண்பராக என்றைக்கு வேண்டுமானாலும் என்னை சந்திக்கலாம். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அருமையான கருத்தை சொல்லியிருக்கிறார். எங்களது வெற்றியின் ரகசியமே பழனிசாமி தான் என்றும், அவர் அ.தி.மு.கவின் பொதுச்செயலாளராக நீடித்தால் எங்கள் வெற்றி சுலபம், அவர் நூறாண்டுகள் வாழ வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

அ.தி.மு.கவை ஒன்றிணைக்க முயற்சி செய்கிறவர்கள், இதனை புரிந்து கொள்ள வேண்டும். உதயநிதி ஸ்டாலின், வஞ்சப்புகழ்ச்சியாகவோ சொல்லியிருந்தாலும் உண்மையை தான் சொல்லி இருக்கிறார். தேர்தல் நெருக்கத்தில் எங்களுக்கான கூட்டணியை நாங்கள் முடிவு செய்வோம். சுதந்திரமாக அ.ம.மு.க. செயல்படும்." என்று அவர் தெரிவித்தார்.

# பா.ம.க.வில் இருந்து அன்புமணி நீக்கம்!

## ராமதாஸ் அறிவிப்பு



பா.ம.க. நிறுவனர் ராமதாஸுக்கும், செயற்பாட்டுத் தலைவர் அன்புமணி ராமதாஸுக்கும் இடையேயான கருத்து மோதல் தீவிரமடைந்துள்ளது.

கடந்த மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் அன்புமணி மீது 16 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, அதற்கான விளக்கத்திற்காக 31ஆம் திகதிக்குள் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அவர் பதில் அளிக்கவில்லை.

இதையடுத்து மீண்டும் 10ஆம் திகதிக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தாலும், அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

இதனிடையே நேற்று செய்தியாளர்களை சந்தித்த ராமதாஸ், "அன்புமணி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அவர் கட்சி ஒழுங்குக்கு கட்டுப்படாதவராகவும், அரசியல்வாதி என்ற தகுதி அற்றவராகவும் நடந்துகொண்டார்.

எனவே, பா.ம.க. செயல்தலைவர் பதவியிலிருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் அன்புமணி நீக்கப்படுகிறார்." என்று அறிவித்தார்.

# இஸ்ரேலுக்குக் கண்டனங்களை வெளியிட பல்வேறு நாடுகள் வெட்கப்பட வேண்டும்

## பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிப்பு



அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது போன்றே, தாமும் கட்டார் மீது தாக்குதல் நடத்தினோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய் கிழமை கட்டாரில் ஹமாஸ் அமைப்பின் உயர் அரசியல் தலைவர்கள் வசிப்பிடத்தைக் குறிவைத்து இஸ்ரேலிய வானூர்திகள் தாக்குதல் நடத்தின.

இதில், கலில் அய் ஹய்யா என்ற மூத்த தலைவரின் மகன் உட்பட 5 பேர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அறிவித்தது.

அத்துடன், கட்டார் தரப்பில், பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்தார்.

இதனையடுத்து, இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு என கட்டார் விமர்சித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஜோர்தான், சவூதி உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் அல்கொய்தா பயங்கரவாதிகளை தேடிச் சென்ற அமெரிக்கா, பாகிஸ்தானில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லாடனை கொன்றதை போன்றே, தாமும் தாக்குதல் நடத்தியதாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்வேறு நாட்டுத் தலைவர்கள் இஸ்ரேலுக்குக் கண்டனம் தெரிவிப்பதையிட்டு அவர்கள் வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை விமர்சித்தார் கட்டாரின் பிரதமர்

கட்டார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜாசிம் அல்-தான், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கடுமையாக விமர்சித்துள்ளார்.

டோஹாவில், ஹமாஸ் தலைவர்களை இஸ்ரேல் கொல்ல முயற்சித்தது காட்டுமிராண்டித்தனமானது என்று அவர் கூறியுள்ளார்.

இந்ததாக்குதல், காசாவில்எஞ்சியிருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகள் தொடர்பில் இருந்த நம்பிக்கை அனைத்தையும்கொன்றுவிட்டதுஎன்றுஅல்-தானி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் டோஹாவில் நடந்த தாக்குதல் அரச பயங்கரவாதம் என்றும் கட்டார் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸின் தலைமை பேச்சுவார்த்தையாளர் கொல்லப்படவில்லை என்று ஹமாஸ் கூறியுள்ள நிலையில், அவர் இருக்கும் இடம் குறித்து, செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த கட்டாரின் பிரதமர், அவர் தொடர்பில் இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.







# ஏமன் மீது இஸ்ரேல் தாக்குதல் 35 பேர் பலி, 130 பேர் காயம்

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செயற்பட்டு வரும் நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறி வைத்து ஏமன் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாலஸ்தீனத்தின் காசாமுனை மீதான இஸ்ரேலின் போரை கண்டித்து, அந்நாட்டின் மீது 2023 முதல் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்த நிலையில் ஏமன் தலைநகர் சனா உட்பட பல பகுதிகளில் இஸ்ரேல் படையினர் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தலைநகர் சனாவில் உள்ள இராணுவ தலைமையகம், எரிபொருள் நிலையம் உள்ளிட்ட இடங்களில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளதோடு 130 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

சில நாள்களுக்கு முன்பு இஸ்ரேல் விமான நிலையம் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் டிரோன் தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் வான் வழித் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் -05.09.2025




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சுமையாக இருக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் பணிகள் பாதியில் நிற்கும்.

உங்கள் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அதன் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம். அனுசரித்துப் போவதன் மூலம் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. அதிக பொறுப்புகளை ஏற்றுக் கொள்வது பற்றி கவலைப்படுவீர்கள்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தூக்கமின்மைபாதிப்பும் ஏறபட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் நல்ல மனநிலையில் இருப்பீர்கள். நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் அது உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு உள்ளது. உது உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். ஊக்கத் தொகை வகையில் பண வரவு காணப்படும்.

நீங்கள் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்றுநீங்கள் உறுதியான மனநிலையில் இருப்பீர்கள். நீங்களாக முடிவெடுப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை காணப்படும். மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய வாய்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு கொண்டிருப்பீர்கள். அன்பு பெருகி காணப்படும். இருவரும் ஒன்றாக இணைந்து மகிழ்வீர்கள்.

நிதிநிலைமை சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. எனவே மகிழ்ச்சியுடன் இருக்க முயலுங்கள். பதட்டமான உணர்விற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. உங்கள் சகபணியாளர்களுடன் கவனமாக உறவாடவும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நீங்கள் சேமிப்பை உயர்த்த இயலாது.

அசௌகரியம் மற்றும் பதட்டம் காரணமாக இன்று நீங்கள் கால் மற்றும் தொடை வலியால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று நீங்கள் பதட்டப்படலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

நீங்கள் செய்யும் பணியும் முயற்சியும் வெற்றியைப் பெற்றுத்தராது. உங்கள் பணியில் மாற்றம் காண நேரலாம். அது உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்க்க வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

உங்கள் குடும்ப நண்பர்களின் ஆரோக்கியத்திற்காக மருத்துவ செலவுகள் ஏற்படலாம். இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும்.




இன்று புதிய நண்பர்களை பெறுவீர்கள். இதனால் உங்கள் சமூக வட்டாரம் விரிவடையும். நீங்கள் புகழடைவீர்கள். நல்ல நிலைமை அடைவீர்கள்.

நீங்கள் விஷயங்களை சகஜமாக எடுத்துக்கொண்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறப்பான உறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். உங்கள் நிதிநிலைமையை சிறப்பாக வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். நம்பிக்கையும் உறுதியும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். நீங்கள் பயனுள்ள முடிவுகளை எடுக்க இயலும். குறுகிய காலத்திற்குள் நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

நீங்கள் புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் ஆரோக்கியமான உறவை பராமரிக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் உற்சாகமும் ஆற்றலும் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையாது. நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். அதனை நீங்கள் அமைதியான முறையில் ஏற்றுக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குழப்பமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவு கொள்ள இயலாது.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. அதிகரிக்கும் செலவினங்களை நீங்கள் எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் ஏற்படும். ஆரோக்கியக் குறைவு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -12.09.2025




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்வதற்கு பொதுவான இலக்கை நோக்கி செயல்படவும்.

அறிவார்ந்த முறையில் பணி செய்தால் மட்டுமே வெற்றி காண இயலும். அதன் மூலம் நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படலாம். இதனால் உறவில் புரிந்துணர்வின்மையும் குறைந்த நல்லிணக்கமும் காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. கூடுதல் செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று நீங்கள் கால் வலியால் அவதிப்பட நேரலாம். உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலன் காணலாம்.




உங்கள் செயல்களை சுமூகமாக மேற்கொள்ள நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். நீங்கள் உங்கள் தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சகபணியாளர்களுடன் கவனமாக உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை சீராக இருக்காது. இன்று உங்கள் நிதிநிலையை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மருத்துவரிடம் சென்று கண் பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் உங்கள் உண்மையான ஆற்றலை அறிந்து கொள்வீர்கள். உங்களின் தகவல் தொடர்பு திறமைக்கான பாராட்டுப் பெறுவீர்கள்.

நீங்கள் திறமையாகப் பணியாற்றுவீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு உதவும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு கொள்வீர்கள். உங்கள் நடத்தையின் மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும்.நீங்கள் பணத்தை சிறப்பாக கையாள்வீர்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி வேண்டியது அவசியம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். அது உங்களுக்கு கவலை அளிக்கும். நீங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வாக்குவாதங்கள் நிகழ வாய்ப்புள்ளது.

இன்று நிதி வளர்ச்சி காண சிறப்பான நாள் அல்ல. நீங்கள் செலவுகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இவ்வாறு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

# வீதியால் சென்றவரை வழிமறித்து தாக்கி அரை தாங்கபவுண் சங்கிலி கொள்ளை



வீதியால் சென்றவரை வழிமறித்து தாக்கி அரை தாங்கபவுண் சங்கிலி கொள்ளையிடப்பட்ட சம்பவம் சாவகச்சேரி கப்பூது பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து கப்புது வீதியால் வடமராட்சி பகுதிக்கு வந்து கொண்டிருந்த ஆண் ஒருவரை வழிமறித்த மோட்டார் சைக்கிள் வந்த இருவர் கத்தியை காட்டி அச்சுறுத்தி தாக்கிவிட்டு அவரின் சங்கிலியை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.